சோபக்ருத் ஹூ மார்கழி மீ
டிஸம்பர் 2023 - ஜனவரி 2024

மலர்: 6
இதழ்: 9

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





விசேஷ தீபோத்ஸவம்

ஸ்ரீ:
சோபக்ருத் ஸு மார்கழி மீ
டிஸம்பர் 2023 - ஜனவரி 2024
மலர்: 6
இதழ்: 9

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^3$ரி ஸமம் ஸ்தா$^2$நம் ப்$^3$ரஹ்மாண்டே$^3$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^3$வோ ந பூ$^4$தோ ந ப$^4$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

திருமயிலையில் கோயில்கொண்டிருக்கும் திருவேங்கடமுடையானின் சதமான ப்ரதிஷ்டாதின உத்ஸவாங்கமாக, இவ்வருடம் ப்ரதிமாதமும் ஒரு விசேஷ மாஸோத்ஸவம் கண்டருள ஸங்கல்பித்துக்கொண்டிருப்பது, நம்நலன் கருதியே. இவ்வுத்ஸவங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாக அமைவது ரஸிக்கத் தகுந்தது.

கார்த்திகை மாதத்தில் லக்ஷதீபோத்ஸவம் கொண்டாடப்பட்டது. இது இடராழி நீங்குகவே (துன்பக்கடலிலிருந்து விடுபடவே) சுடராழியான் அடிக்கே சூட்டப்பட்ட விழாவாகும். இந்த இடருக்கு காரணம், நமக்கு இருக்கும் அஹங்கார / மமகாரங்களே என்பது நம் பெரியோர்களின் தீர்ந்த கருத்து. இவ்வஹங்காரத்தை ஒழிக்க முற்படுவதே நாம் அடுத்துச் செய்யவேண்டிய செயலாகும். இதனையே, தொடரும் மாதத்தின் பெயர் நமக்கு வலியுறுத்துகிறது. மார்கழி என்பதை மார் + கழி எனப் பிரித்தால், நம் மார்பில் உள்ள அஹங்காரத்தை, கழிக்கவேண்டும் எனவாகிறது. இதற்கான மார்க்கத்தை (வழியை) யும், இதன் பெயரே குறிப்பிட்டுக் காட்டுகிறது. எப்படியெனில்:

வடமொழியில், இம்மாதத்திற்கு ‘மார்க்க சீர்ஷம்’ எனப்பெயர் – அதாவது மார்க்கங்களில் தலையாயது, என்பதாம். சாஸ்த்ரப்படி, எம்பெருமான் அருளால்தான் நம்மிடரெலாம் நீங்கும்; அதற்கு அவன் திருவடிகளில் ஒரேமுறை சரணாகதி செய்யவேண்டும். இந்த பாதுகையின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டிய முதல்வர் பரதன்தான். அவராலன்றோ ‘ராமராஜ்யத்தை விட, ராம-பாதுகா ராஜ்யம் சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டது’ என, ஸ்வாமி தேசிகன் பாதுகா ஸஹஸ்ர க்ரந்தத்தில் ஆரம்பத்திலேயே புகழ்கிறார். இதைக் கொண்டாடும் வகையில் இம்மாதத்திற்கான மாஸோத்ஸவம் பாதுகாஸஹஸ்ர உத்ஸவமாக நடத்தப்படவிருக்கிறது. இதைப் பற்றிய விவரங்கள் தனியே தரப்பட்டுள்ளது.

மேலும், மார்கழியில் வரும் வழக்கமான விசேஷ உத்ஸவங்களான உஷ: கால பூஜை/ அத்யயன உத்ஸவம் / ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் / பரமபத ஏகாதசீ / ஶ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் வார்ஷிகோத்ஸவம் முதலிய விழாமழைதான். நனையக் காத்திருங்கள்!

# Igniting Knowledge By Illumination

## FROM THE DESK OF TRUSTEES



As we immerse ourselves in the auspicious month of Margazhi, the air is saturated with devotion, and the temple resonates with the divine energy of the Srivaishnavite tradition.

Our temple has lined up a series of special events and celebrations this month to enrich the spiritual journey of the devotees. Adhyayana Utsavam, Vaikunda Ekadasi, ThondaradipPodi Azhwar Satrumurai, and Andal Neeratta Utsavam culminating in Bhogi ThirukKalyanam will be conducted with customary grandeur. ThirupPavai Upanyasam, organised by the Vedaparayana Sabha, will be held through the month.

As a part of Sathamana Utsavam, we are planning to conduct **Arjitha Brahmotsavam** in the month of Margazhi. Once again, it is an expression of gratitude, humility, and the desire to re-establish our close connection with the deities.

There will also be a special Utsavam **Padhuka Sahasra Parayanam** on January 6, 2024, seeking the wellbeing of the world (Loka Kshemam). In this multifaceted masterpiece, Swami Desikan has celebrated the glory of the two Padukas adorning the lotus feet of the Lord in 1,008 verses (32 Padhathis). It is said that Swami Desikan composed the entire work within one Yamam of a night.

As in the previous years, a special Margazhi Music Festival has been organised at Sri Desika Bhavanam with the support of Sri Parthasarathy Swamy Sabha and Carnatica for the benefit of music lovers.

Last month, **Sahasradeepa Alankara Mahotsavam** was performed as a part of Sathamana Mahotsavam. The temple was adorned with more than 30,000 traditional lamps and floral decorations. The lamp is a symbol of knowledge and the templeful of them seemed to spread divinity and knowledge even as the Divya Dhampathis were gently rocked in the Oonjal amidst Vedic chanting and special Nadhaswara concert. The Sevarthis, both men and women, enthusiastically volunteered in lighting them, creating a great spiritual experience for all.

A special Geetha Yajnam and Satrumurai were conducted in our Desika Bhavanam by the Sishyas of Vaikuntavaasi Sri U.Ve. Vidwan Sarasarajna Thirukkalm Narasimharaghavacharya Swamy on the occasion of his 99th Thirunakshatra Mahotsava celebration on the Karthikai-Pushyam day. ❈

| சோபக்ருத் வருட மார்கழி மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | | பகல்பத்து |
| டிஸம்பர் 2023 / ஜனவரி 2024 | மார்கழி | | | | | |
| 17/12/2023 | 1 | பஞ்சமி | ஞாயிறு | ச்ரவணம் | பகல்பத்து 5ம் நாள் மாதப்பிறப்பு | பகல் பத்து ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 18/12/2023 | 2 | ஷஷ்டி | திங்கள் | அவிட்டம் | பகல்பத்து 6ம் நாள் | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 19/12/2023 | 3 | ஸப்தமி | செவ்வாய் | பூரட்டாதி | பகல்பத்து 7ம் நாள் | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 20/12/2023 | 4 | அஷ்டமி | புதன் | உத்தரட்டாதி | பகல்பத்து 8ம் நாள் | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 21/12/2023 | 5 | நவமி | வியாழன் | ரேவதி | பகல்பத்து 9ம் நாள் | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 22/12/2023 | 6 | தசமி | வெள்ளி | அச்வினி | பகல்பத்து 10ம் நாள் / திருமொழி சாற்றுமுறை | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 23/12/2023 | 7 | ஏகாதசி | சனி | பரணி | வைகுண்ட ஏகாதசி. காலை பரமபத வாசல் திறப்பு. பெருமாள், நம்மாழ்வார், ஸ்வாமி தேசிகன் உள் புறப்பாடு. பத்தி உலாத்தல். காலை பெருமாள் சின்ன கருட வாஹனம். நம்மாழ்வார், ஸ்வாமி தேசிகன் வீதி புறப்பாடு. மதியம் திருமஞ்சனம். மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு இராப்பத்து 1ம் நாள் | வைகுண்ட ஏகாதசி: ஸ்ரீ N. ராஜகோபாலன். இராப்பத்து: ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 24/12/2023 | 8 | த்வாதசி / த்ரயோதசி | ஞாயிறு | க்ருத்திகை | இராப்பத்து 2ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 25/12/2023 | 9 | சதுர்தசி | திங்கள் | ரோஹிணி | இராப்பத்து 3ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 26/12/2023 | 10 | பௌர்ணமி | செவ்வாய் | ம்ருகசீர்ஷம் | இராப்பத்து 4ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 27/12/2023 | 11 | ப்ரதமை | புதன் | திருவாதிரை | இராப்பத்து 5ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 28/12/2023 | 12 | ப்ரதமை / த்விதீயை | வியாழன் | புனர்வஸு | இராப்பத்து 6ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29/12/2023 | 13 | த்விதீயை / த்ருதீயை | வெள்ளி | புஷ்யம் | இராப்பத்து 7ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 30/12/2023 | 14 | த்ருதீயை / சதுர்த்தி | சனி | ஆயில்யம் | இராப்பத்து 8ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 31/12/2023 | 15 | சதுர்த்தி / பஞ்சமி | ஞாயிறு | மகம் | இராப்பத்து 9ம் நாள் மாலை பெருமாள் நம்மாழ்வார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 01/01/2024 | 16 | பஞ்சமி | திங்கள் | மகம் / பூரம் | இராப்பத்து 10ம் நாள் காலை பெருமாள் நம்மாழ்வார் திருமஞ் ஜனம். மாலை வீதி புறப்பாடு. இரவு நம்மாழ்வார் திருவடி தொழுதல் | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 02/01/2024 | 17 | ஷஷ்டி | செவ்வாய் | பூரம் / உத்தரம் | இயற்பா சாற்றுமுறை | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 03/01/2024 | 18 | ஸப்தமி | புதன் | உத்தரம் | தேசிக ப்ரபந்த சாற்றுமுறை | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 04/01/2024 | 19 | அஷ்டமி | வியாழன் | ஹஸ்தம் | ஸ்ரீ கூரத்தாழ்வான் | |
| 05/01/2024 | 20 | நவமி | வெள்ளி | சித்திரை | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 1ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம் | ஸ்ரீ S. கோபாலன் குடும்பத்தினர் |
| 06/01/2024 | 21 | தசமி | சனி | ஸ்வாதி | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 2ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம், மாலை பல்லாண்டு தொடக்கம் | ஸ்ரீஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ R. ஸந்தான க்ருஷ்ணன். திருப்பல்லாண்டு தொடக்கம்: ஸ்ரீ S.S. ராகவன் |
| 07/01/2024 | 22 | ஏகாதசி | ஞாயிறு | விசாகம் | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 3ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம் | ஸ்ரீ முரளி ரங்கநாதன் |
| 08/01/2024 | 23 | த்வாதசி | திங்கள் | அனுஷம் | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 4ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம் | ஸ்ரீ S. அருண் |
| 09/01/2024 | 24 | த்ரயோதசி | செவ்வாய் | கேட்டை | ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதி புறப்பாடு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 5ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் ஸ்ரீ S. ஸுதர்சனம். ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ P.V. பார்த்தஸாரதி குடும்பத்தினர் |
| 10/01/2024 | 25 | சதுர்தசி | புதன் | மூலம் | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 6ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம் | ஸ்ரீமதி கீதா ஸ்ரீநிவாஸன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11/01/2024 | 26 | அமாவாசை | வியாழன் | பூராடம் | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 7ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம் | ஸ்ரீ கோபால்சாமி ஐயங்கார் பண்டு ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி |
| 12/01/2024 | 27 | ப்ரதமை | வெள்ளி | உத்தராடம் | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 8ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம். | ஸ்ரீ V.P. ப்ரேம்குமார் |
| 13/01/2024 | 28 | த்விதீயை | சனி | ச்ரவணம் | ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 9ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம். பெருமாள் தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், தேசிகன் வீதி புறப்பாடு ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன். ச்ரவணம்: ஸ்ரீ ஸ்ரீராம் பார்த்தஸாரதி |
| 14/01/2024 | 29 | த்ருதீயை | ஞாயிறு | அவிட்டம் | போகிப் பண்டிகை. ஆண்டாள் திருக்கல்யாணம். ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 10ம் நாள். காலை ஆண்டாள் வீதி புறப்பாடு. பெருமாள், ஆண்டாள் திருமஞ் ஜனம். மாலை பெருமாள், ஸ்ரீ ஆண்டாள் வீதி புறப்பாடு. இரவு திருக்கல்யாணம், சேர்த்தி | ஸ்ரீஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ ஜகன்மோஹன். போகி உத்ஸவம்: ஸ்ரீ K. ரங்கநாதன் குடும்பத்தினர் |
| 05.01.2024 முதல் 14.01.2024 வரை ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் | | | | | | |
| 06.01.2024 – சதமான உத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் உத்ஸவம் | | | | | | |
| 15.01.2024 தை 1 – உத்தராயண புண்யகாலம். பெருமாள், ஆண்டாள் ஊர்கோல உத்ஸவம் | | | | | | |

## மார்கழியில் முக்கிய உத்ஸவங்கள்

| | |
|---|---|
| **தநுர் மாத ஆராதனம் ஆரம்பம்**<br>டிஸம்பர் 17 (ஞாயிறு) | **தேசிக ப்ரபந்த சாற்றுமுறை**<br>ஜனவரி 3 (புதன்) |
| **தினமும் மாலை திருப்பாவை உபந்யாஸம்**<br>**பகல் பத்து சாற்றுமுறை**<br>டிஸம்பர் 22 (வெள்ளி) | **ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் (10 நாட்கள்)**<br>**ஜனவரி 5 (வெள்ளி) முதல்**<br>14 (ஞாயிறு) வரை |
| **வைகுண்ட ஏகாதசி,**<br>**இராப்பத்து தொடக்கம்**<br>டிஸம்பர் 23 (சனி) | **ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் உத்ஸவம்**<br>**பல்லாண்டு தொடக்கம்**<br>ஜனவரி 6 (சனி) |
| **இராப்பத்து சாற்றுமுறை,**<br>**நம்மாழ்வார் திருவடித்தொழல்**<br>ஜனவரி 1 (திங்கள்) | **தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்**<br>ஜனவரி 9 (செவ்வாய்) |
| **இயற்பா சாற்றுமுறை**<br>ஜனவரி 2 (செவ்வாய்) | **ஹனுமத் ஜயந்தி**<br>ஜனவரி 11 (வியாழன்) |
| | **போகி உத்ஸவம்**<br>ஜனவரி 14 (ஞாயிறு) |

ஸ்ரீ:

# வைதிக கர்மானுஷ்டானம்

நாவல்பாக்கம் சதுர்வேதசதக்ரது ஸ்ரீ உ.வே. யஜ்ஞுவராஹ தாதாசார்ய ஸ்வாமி

(ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் 1975-ம் ஆண்டு ஸம்ப்ரோக்ஷண மலரில் வெளிவந்த வ்யாஸம்)

பரித்ராணாயஸாதூநாம் என்று ஸர்வநேதாவான ஸாரதி தான் கீதையில் அருளிச்செய்தபடி அக்ரூரமாலாகாராதிகள் போன்ற பரம பாகவதர்களான ஸ்ரீவைஷ்ணவ சிரோமணிகள் கண்டு களித்து ஆராதிப்பதற்காக அவர்களின் திருமாளிகைகளிலும் திவ்யாலயங்களிலும் திவ்யமங்கள விக்ரஹத்துடன் அவதரித்து ஸேவை ஸாதித்தருள்கிறான்.

இப்படி அவதரித்த ஸர்வேச்வரன் ஸாதுக்கள் செய்தருளும் யாக, தான, ஹோமாத்மகமாயும், ஸ்துதி, நமஸ்கார, கீர்த்தன, அர்ச்சன ரூபமாயுமுள்ள திவ்யாராதனத்தைக் கிருபையால் ஸ்வீகரித்து அம்மஹான்களுக்கு போகாபவர்கரூபமான பலங்களை அநுக்ரஹித்து வருகிறான்.

இவ்விதமான பகவதாராதன மூலம் நமக்கு பகவத் கைங்கர்யமும் அர்ச்சாவதாரானுபவமும் ஏற்படுகின்றன. அர்ச்சாவதாரானுபங்களை விவரித்துக் கூறுவதற்காகவே வைணவ ஆகமங்கள் தோன்றின.

இவ்விதமாகவே ஆபஸ்தம்பாதி மஹர்ஷிகளும் த்ரேதாக்னி மூலம் எம்பெருமானை ஆராதிக்கும் முறைகளைவகுத்துள்ளனர். இவ்விரண்டு முறைகளும் அசேஷ ஜகத்ஹிதாநுசாஸன ப்ரவ்ருத்தமான வேதத்தையே மூலமாகக் கொண்டவைகள்.

எம்பெருமான் அர்ச்சைகளில் தன்னை எவ்விதம் ஆராதிக்க வேண்டும் எனும் முறையைத் தானே ஸ்ரீபாஞ்சராத்ரம் மூலமும் தன் புத்ரனான விகனஸ முனிவன் மூலமும் வெளியிட்டுள்ளான்.

அக்னியில் ஆராதிக்கும் முறையும் பிம்பங்களில் ஆராதிக்கும் முறையும், வேதமூலமாக இருப்பதால், அர்ச்சாவதாரங்களில் ஆராதிக்கும் முறைகள் காணப்படுவதை நாம் பார்த்து வருகிறோம்.

பிம்பப்ரோக்ஷணம், பிம்பாராதனங்கள், உத்ஸவாதிகள் இவைகளிலுள்ள வைதிக கர்மானுஷ்டான முறைகளைச் சிறிது பராமர்சிப்போம்.

ஸம்ப்ரோக்ஷணாதிகளில் அக்னியிலும் கும்பதீர்த்தங்களிலும் ஆவாஹனபுரஸ்ஸரமாய் ஸர்வோபசாரத்துடன் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. ஹோமம் நடக்கும் வேளைகளில் பூர்ணாஹூதி ஆன பிறகு ஸம்பாதாஜ்யத்தை (ஹோமம் செய்து மிகுதியான நெய்) கும்பத்தில் சேர்த்து அக்னியில் உள்ள சக்தியைக் கும்பத்தில் வரும்படி செய்கிறார்கள். ப்ரோக்ஷண தினத்தன்று கும்ப தீர்த்தத்தால் திவ்யமங்கள விக்ரஹங்களுக்கு ப்ரோக்ஷணம் நடைபெறுகிறது. இங்கு முதல் முதலாக பகவத் சக்தி அக்னிகளிலே ஸம்பாதிக்கப்பட்டு, இரண்டாவதாக அதைக் கும்ப தீர்த்தத்தில் சேர்த்து, கும்பதீர்த்தத்தில் ஏற்பட்டிருக்கும் பகவத் சக்தியை மூன்றாவதாக விக்ரஹத்தில் ப்ரோக்ஷண மூலம் நிலைநிறுத்துவதால் பகவத் ஸாந்நித்யம் ஏற்படுகிறது.

அக்னியிலும் தீர்த்தத்திலும் பெருமான்களை நிற்கச் செய்வது வைதிகமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அக்னிஸ் ஸர்வா தேவதா: ஆபோவை ஸர்வா தேவதா: என்று வேதமே அக்னியும் தீர்த்தமும் எல்லா தேவதைகளுக்கும் இருப்பிடமாக அமைந்து இருப்பதைக் கூறுகிறது. ஆகையால் அக்னியிலும் தீர்த்தத்திலும் எம்பெருமாளை ஆராதித்து அந்த அந்த சக்தியை திவ்யமங்கள விக்ரஹத்தில் வரும்படி செய்வது வைதிகமான மார்க்கத்தைப் பின்பற்றியது.

கும்பங்கள் வைக்கும் மேடைகளுக்கு 'வேதி' என்கிற வ்யவஹாரமும், கும்பாராதனம், ஹோமம் இவைகள் நடைபெறும் இடத்திற்கு த்ரேதாக்னி உபாஸனம் நடை பெறும் இடத்திற்குச் சொல்லி வரும் 'யாக சாலை வேதி' என்கிற பெயரைப் பின்பற்றியதேயாகும்.

ஆலயாக்னி குண்டங்களிலும் ச்ரௌதாக்னி போல் ஆஹவனீய, தக்ஷிணா- ஸப்ய - ஆவஸத்யாக்னி என்கிற வ்யவஹாரம் இருந்து வருவதைப் பார்க்கிறோம்.

வைதிக கர்மாக்களில் நான்கு விதமான அக்னியில் அர்ச்சனம் நடைபெற்று வருகிறது. அவ்வாறே ஆலயங்களிலும் சதுஸ்தானார்ச்சனம் நடைபெறுகிறது. ச்ரௌதத்தில் பஞ்சாக்னி உபாஸனம் செய்வது போல் ஆலயத்திலும் மூல - கர்ம - உத்ஸவ – பலி - போக என்று ஐந்து விதமான பிம்பார்ச்சனம் நடைபெறுகிறது. நித்யம் இரண்டு வேளைகளிலும் அக்னிஹோத்ரம் போல் ஆலயங்களிலும் இரண்டு வேளைகளிலும் திருவாராதனமும், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை நடைபெறும் இஷ்டி (யாகம்) பக்ஷோத்ஸவமும் வஸந்த காலத்தில் ஸோமயாகங்கள் போல் நடைபெறும் சித்திரை, வைகாசி மாதங்களில் ப்ரஹ்மோத்ஸவமும் நடைபெறுகின்றன. யாகங்களில் கடைசி தினத்தில் நடைபெறும் அவப்ருதம் (தீர்த்தவாரி) போல் ப்ரஹ்மோத்ஸவத்தில் கடைசி

தினம் அவப்ருதம் (தீர்த்தவாரி) நடைபெறுகிறது. ச்ராவண மாதத்தில் ப்ராயச்சித்தமாகப் பவித்ரேஷ்டி (யாகம்) போல் ப்ராயச்சித்தமாக ஆலயங்களில் பவித்ரோத்ஸவமும், பிண்ட பித்ருயஜ்ஞத்தில், மெத்தை, தலையணை முதலானவைகளை வைத்து ஆராதிப்பது போல ஆலயங்களில் சயனோத்ஸவமும் நடைபெறுகின்றன. இம்மாதிரியான ஒற்றுமைகள் இரண்டு ஆராதனங்களுக்கும் பல உள்ளன.

ப்ரதிஷ்டை ஆனபிறகு மூலவிக்ரஹத்தில் எம்பெருமானுடைய நித்யஸாந்நித்யம் இருந்து வருகிறது. அவ்வப்போது மூலபேரத்திலிருந்து சக்தியை உத்ஸவாதி பேரங்களுக்குக் கொண்டு வந்து ஆராதனாதிகள் செய்கிறார்கள். ப்ரதி தினமும் மூலவரிடமிருந்து உத்ஸவாதி எம்பெருமான்களுக்கு சக்தி கொணரப்படுகிறது. ஆராதனம் உத்ஸவாதிகள் எல்லாம் விசேஷமாக உத்ஸவ மூர்த்தியிலேயே நடைபெறுகின்றன.

யாககர்மாக்களிலும் (ச்ரௌதாக்னி) ஆதானமான பிறகு கார்ஹபத்யாக்னி தான் மூலபேரத்தைப் போல் இருந்து வருகிறது. ஆனால் யாகங்கள் கார்ஹபத்யாக்னியில் செய்யப்படுவதில்லை. ஆஹனீயாக்னியில்தான் வபாஹோமாமாதி முக்ய ஹோமங்கள் செய்யப்படுகின்றன. ஆஹனீயாக்னி என்பது உத்ஸவ மூர்த்தியைப் போல் ச்ரௌத கார்யத்தில் விளங்குகிறது.

நான்முகக் கடவுளும் தான் செய்த அச்வமேத யாகத்தில் இந்த அக்னியில் வபாஹோமம் செய்யும் போதுதான் பெருந்தேவீ மணாளனான பேரருளாளன் (தேவராஜன்) தோன்றியதாகப் புராணம் கூறுகிறது. வைதிகமான யாகங்களை யாரோ ஒருவன் செய்தாலும் அது உலக க்ஷேமத்திற்காக ஏற்பட்டது என்பது தெளிவானது. யாகங்களில் சொல்லப்படும் வேத மந்த்ரங்களில் உலக நன்மைகளையே வேண்டுவதைப் பார்க்கிறோம். யாகங்களின் ஸ்வபாவமே (தன்மையே) உலக நன்மைகளை ஸம்பாதிப்பதாய் இருப்பதால் லோக நன்மைக்காகச் செய்கிறேன் என்று ஸங்கல்பம் செய்யப்படுகின்றது. வைதிகமான யாக கர்மாவைப் போல் ஆலயத்தில் நடைபெறும் நித்யாராதன உத்ஸவாதிகளும் உலக நன்மைக்காகவே ஏற்பட்டவை. ஆலய கார்யங்களை யார் செய்தாலும் செய்பவர்களுக்குப் பலவகையில் உபகரித்தலும் எல்லாம் உலக நன்மைக்காகவே செய்யப்படுகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

தார்ச, பூர்ணமாஸ இஷ்டியில் அந்வாஹார்யம் தக்ஷிணை என்று சொல்லப் பட்டுள்ளது. அந்வாஹார்யம் என்பது பக்வமான சுத்தான்னம். அதைத்தான் யாகத்தை நடத்திக் கொடுத்தவர்களுக்கு தக்ஷிணையாகக் கொடுக்கிறார்கள். நித்ய கர்மாவானபடியால் தங்கம் முதலானவைகள் கொடுக்க இயலாது. நித்யமான கர்மாவில் யதாசக்தி சொல்லியிருப்பதால் அன்னம் கொடுத்தாலே போதும். இம்முறையைப் பின்பற்றியே ஆலயங்களில் நித்ய கைங்கர்யபரர்களுக்கு அன்னமே (வில்லை ப்ரஸாதமே) கொடுக்கப்பட்டு வருகிறது. முற்காலத்தில் கைங்கர்யபரர்களுக்கு சம்பளம் கொடுத்தல் என்னும் முறையைப் பின் பற்றியதாகத் தெரியவில்லை. விசேஷ உத்ஸவாதிகளில் மஹா யஜ்ஞங்களில் ஹிரண்யம் ஸம்பாவனையாகக் கொடுப்பது போல் பணம் கொடுப்பது வழக்கம்.

மேலும் எம்பெருமான் உத்ஸவாதிகளில் எம்பெருமான் உத்ஸவம் முடிவதற்கு முன்பே பெருமாள் முன்னிலையில் கைங்கர்யபரர்களுக்கு தீர்த்த ப்ரஸாதாதி ஸ்வதந்த்ரங்களும் விநியோகங்களும் எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போது நடைபெறுகின்றன. இவையும் யாகத்தில் ஹோமம் செய்து மிகுதியான ஹவிஸ்ஸை யாக சாலையிலேயே யாகம் முடிவதற்கு முன்பே வேள்வியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு எல்லார் முன்னிலையிலும் போஜனமும் நடை பெறுவது போன்றவையேயாகும். புரோடாசம் சதுர்தா கரோதி - அத்ரைவர்த்விஜோ ஹவிச்சேஷான் பக்ஷயந்தி என்று வேள்வியாளர்க்கு அங்கேயே ஸ்வதந்த்ரங்களாகப் ப்ரஸாதங்கள் கொடுக்கப்படவேண்டும் என்றும் அவற்றை யாக சாலையிலேயே சாப்பிட வேண்டும் என்றும் அங்கு மற்றவர்கள் பார்ப்பதால் தோஷமில்லை என்றும் சாஸ்த்ரம் கூறுவதை ஆலயங்களும் அப்படியே பின்பற்றுகின்றன. எம்பெருமான் ஸந்நிஹிதனாக இருப்பதாலும் நாம் எல்லோரும் பகவதாராதனபாகிகளாக இருப்பதாலும் எல்லார் முன்னிலையிலும் ப்ரஸாத ஸ்வீகாரம் ஹவிச்சேஷ ப்ராசனமாகவே கொள்ளப்படுகிறது.

எல்லா திவ்யதேசங்களிலும் ஆழ்வார் கோஷ்டியில் சற்றேறக்குறைய ஏகஸ்வரத்திவேயே அருளிச் செயல்களை ஸேவித்து வருகிறார்கள். அந்த அந்தப் பாட்டுகளுக்கு ராகம் தாளம் இருப்பது ப்ரஸித்தம். ஸ்ரீமந்நாதமுனிகள் தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்த வள்ளல் என்று ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்கிறார்.

ஆனால் அந்த ராக தாளங்களை ஏன் பின்பற்றவில்லை? இங்கும் யாகச் சடங்குகள் இவற்றிற்கு மூலப்ரமாணங் களாக அமைத்திருக்கின்றன.

வேதங்களில் மந்த்ர பாகங்களில் சாதுஸ்வர்யம் கட்டாயமாக இருந்து வருகிறது. ஆனால் பாணினி மஹர்ஷி யாககர்மாவில் தானஸ்வரம் காணப்படுவதைத் தன் ஸூத்ரத்தில் தெரிவிக்கிறார்.

தானஸ்வரம் என்பது ஒரு தனியான ஸ்வரம். யாகங்களில் ஹோதா யாஜ்யா புரோநுவாக்யங்களைச் சொல்லுங்காலத்திலும் சஸ்த்ரம் சொல்லுங் காலத்திலும் இந்தத் தானஸ்வரத்தைத் தான் பின்பற்றுகிறார். சாதுஸ்வர்யத்தையோ மற்ற கானஸ்வரத்தையோ பின்பற்றினால் அர்த்தானுஸந் தானம் நிறைவேறாது. ஸாமகானத்தில் கானம் ப்ரதானமாயிருப்பதால் பத ஸ்வரூபமே மாறுதல் அடைகிறது. இங்குக் கானத்திற்குத்தான் ப்ராதான்யமேயன்றி அர்த்தானுஸந்தானத்திற்கு முக்யத்வம் கிடையாது. அவ்விதமே அருளிச் செயலை ஸேவிக்கும் காலத்தில் தாங்களும் அர்த்தானுஸந்தானம் செய்து பிறர்க்கும் அர்த்தானுஸந்தானத்தை உண்டு பண்ண வேண்டியிருப்பதால் அவ்வப்பாசுரங்களின் ராக தாளங்களை விட்டு தானஸ்வர ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றி கோஷ்டியில் அனுஸத்திக்கப்படுகிறது.

எம்பெருமான் வீதியில் எழுந்தருளும் போது வேத பாராயண கைங்கர்யபரர்கள் ஒருவருக்கொருவர் கைகளைக் கோத்துக் கொண்டு அனைவரும் கேட்கும்படியான குரலில் வேத மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டு எம்பெருமானைப் பின் தொடர்கின்றனர். மறைத்துச் சொல்ல வேண்டிய வேதங்களை இப்படி எல்லோருடைய காதிலும் விழும்படி சொல்லுவது முறைதானா என்கிற கேள்விக்கு யாக ப்ரமாணமே விடையளிக்கும் வகையில் அமைந்துள்ளது. ஸாரஸ்வத ஸத்ரம் என்கிற யாகத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் வேள்வியாளர்கள் ஒருவர்க்கொருவர் ஸந்தோஷத்தோடு பெரிய குரலில் சத்தம் செய்து கொண்டு போக வேண்டும் என்பதை 'ஆக்ரோசந்தோயாத்தி (கா-7, ப்ர-2, அநு-1) என்று உள்ளதைப் பின்பற்றியே உத்ஸவ காலத்தில் வேத பாராயணம் நடைபெறுகிறது.

அலங்குர்வாதேயஜமான: பத்நீச என்கிற ஆபஸ்தம்ப ஸூத்ரத்தை அனுஸரித்து ச்ரௌதாதி கர்மாவில் அக்னிக்கு அலங்காரம் செய்பவர்கள் யஜமானனும் யஜமான பத்னியும். அவர்கள் அவ்வலங்காரத்தைச் செய்து கொண்டு அக்னி ஆராதனத்தைத் தொடங்குகிறார்கள். அதைப் பின்பற்றியே உத்ஸவ காலங்களில் எம்பெருமான்களுக்கு விசேஷ அலங்காரம் செய்து, உத்ஸவத்தில் ஈடுபடும் கைங்கர்யபரர்களும் தங்களை முடிந்தவரை அலங்கரித்துக் கொண்டு உத்ஸவத்தை அனுபவிக்கிறார்கள்.

வைணவ ஆலயங்களில் பல உத்ஸவங்கள் நடைபெற்றாலும் அவைகளில் கருடோத்ஸவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பக்தகோடிகளும் கருடோத்ஸவத்தில் எம்பெருமானை ஸேவிக்கத் தவறுவதில்லை. வெகு தூரத்தில் இருப்பவர்கள்கூட ச்ரமங்களைப் பாராமல் கருடோத்ஸவம் நடக்கும் ஸ்தலத்துக்கு வந்து தர்சனம் செய்கிறார்கள். கருடவாகன ஸேவையைப் போல சேஷவாஹன ஸேவையும் மிகச் சிறந்ததே. ஆதிசேஷனும் பெரிய திருவடியைப் போல் நித்யஸூரி வகுப்பைச் சேர்ந்தவரே. எம்பெருமானும் ஸ்ரீவைகுண்டத்தில் சேஷபர்யங்கத்திலே தான் பிராட்டிமார்களுடன் எழுந்தருளி ஸேவை தருகிறான். இங்கும் சேஷ வாஹனத்தன்று ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் முறையைப் பின்பற்றியே அந்த அலங்காரமே செய்கிறார்கள். நாம் அஷ்டாக்ஷராதி ஜப காலத்திலும் பூஜா காலத்திலும் இந்நிலையையே த்யானிக்கிறோம். இவ்வளவு விசேஷங்கள் இருந்தும் சேஷ வாஹன ஸேவைக்கு ஆகமமோ, மக்களோ கருடவாஹன ஸேவைக்குப் போல் முக்யத்வம் கொடுக்கவில்லை. இதற்கும் யாக அடிப்படையே பெரிய காரணம். திருவடியின் திருமேனி வேதங்களால் ஆக்கப்பட்டது.

ஸுபர்ணோஸிகருத்மான் த்ரிவ்ருத்தே சிரோகாயத்ரம் சக்ஷுஸ் ஸ்தோம ஆத்மா ஸாம தே சக்ஷ; சபா யஜூம்ஷி நாம (கா-4, ப்ர-1) என்று வேதமே அவனைப் பற்றிப் புகழ்வதாலும் வேள்வியில் கருடவடிவம் கொண்ட குண்டங்களின் பேரில் அக்னி பகவானை எழுந்தருளப் பண்ண வேண்டுமென்று வேதங்களும் வைதிகஸூத்ர நூல்களும் கூறுவதாலும் வைதிகமான வாஹனம் பெரிய திருவடி என்கிற காரணத்தால் இதற்கு மட்டும் தனிச் சிறப்பு கொள்ளப் படுகிறது.

பெரிய திருவடியைப் பற்றி யஜுர் வேதம் ஆறாவது காண்டம் முதல் ப்ரச்னத்தில் கூறியிருப்பதன் சுருக்கம்: கருத்மானின் தாயான ஸுபர்ணி என்பவள் தன் புதல்வர்களை அழைத்து, தன் அடிமைத் தொழிலைத் தவிர்க்க, த்யுலோகம் என்கிற வைகுண்டத்தில் ஓஷதித் தலைவனாயும் மிக்க ரஸவத்தாயு முள்ள ஸோமம் என்னும் பெயரில் எழுந்தருளியுள்ள விஷ்ணுவை இந்த லோகத்திற்குக் கொண்டு வரும்படி கட்டளையிடுகிறாள்.

அந்தக் கட்டளையை நிறைவேற்ற முதலில் ஜகதீ என்னும் சந்தோவடிவமான புதல்வன் சென்று, கொண்டு வரமுடியாமல் ஸோமப் பாதுகாப்பாளரால் துரத்தப்பட்டுத் திரும்புகிறான். இரண்டாவதாக த்ரிஷ்டுப் என்னும் சந்தோவடிவம் கொண்ட புதல்வனும் தோல்வியுற்றுத் திரும்பிவிட்டான். மூன்றாவது முறையாகப் பெரிய திருவடியான கருடன் காயத்ரீசந்தோ வடிவம் கொண்டு த்யுலோகத்தில் உள்ள ஸோமத்தை (விஷ்ணுவை) பாதுகாப்பாளரை வென்று இந்த பூலோகத்திற்குக் கொண்டு வந்தான். பெரிய திருவடியின் தாயின் அடிமைத்தனம் தொலைந்தது. முதன் முதலாக எம்பெருமான் கருட வாஹனத்தில் இந்த பூமிக்கு வந்து ஸுபர்ணியின் அடிமைத்தனத்தைப் போக்கி

ஸேவை ஸாதித்தபடியாலும் நமக்கு முதல் முதலில் கருட வாஹனத்தோடு ஸேவை தந்ததைக் கொண்டு அவ்வாஹனத்திற்கு ஏற்றம் கொள்ளப்படுகிறது.

மேலும் கருட சயனம் என்னும் யாகத்தில் இஷ்டகை என்று சொல்லப்படும் செங்கற்களால் கருடவுருவத்தில் அக்னி குண்டத்தை எழுந்தருளச் செய்து ஆராதிக்கிறார்கள். யஜ்ஞோவை விஷ்ணு: என்கிற ப்ரமாணப்படி யஜ்ஞ மூர்த்தியான எம்பெருமான் கருடவடிவமான வேதியில் இருந்து கொண்டு ஹவிர்பாகங்களைப் பெற்றுக்கொண்டு, உலக க்ஷேமங்களைச் செய்வதால் கருடவாஹன ஸேவை மிகச்சிறந்ததாய் விளங்குகிறது.

*இக் காரணம் கொண்டே ஸாயம் ஸந்தியில்,*
*ஸாயம் ஸரஸ்வதீம் ச்யாமாம் ரவிமண்டல மத்யகாம்।*
*ஸாமவேதம் வ்யாஹரந்தீம் சக்ராயுததராம் சிபாம்*
*த்யாயாமி விஷ்ணு தைவத்யாம் வ்ருத்தாம் கருட வாஹனாம்*

என்று அனுஸந்தித்து வருகிறோம். ஆகையால் திவ்யாலயங்களில் நடைபெறும் பகவதாராதனாதிகள் வைதிக சுர்மாக்களின் அடிப்படைகளிலேயே அமைந்துள்ளது என்பதை எந்த வைதிகனும் மறுக்கமாட்டான். ஆகையால் வைதிகாக்னியின் உபாஸனமும் அர்ச்சாவதார உபாஸனமும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வதர்மங்களாக அனுஷ்டிக்க வேண்டியவை.

அந்தணர்கள் ப்ரஹ்ம ஸ்தானத்தில் இருப்பதால் லோகத்தினுடைய யோக க்ஷேமங்களின் நிர்வாஹங்களை இவன் செய்ய வேண்டிவருகிறது. உலகங்களின் நன்மைகளை வேதங்களால் பேசப்படும் யாகாதிகளைச் செய்வதன் மூலம் தான் ஸம்பாதிக்க முடியும். இக் கருத்தை ஆழ்வார்களும் தங்கள் அருளிச் செயல்களில் திவ்யதேச வர்ணனைகளில் காட்டியிருக்கிறார்கள். ஆழ்வார்களின் திருவுள்ளப் படியும் வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் உள்ள மஹான்கள் யஜ்ஞாராதனத்தையும் அர்ச்சாவதாரத் திருவாராதனாதிகளையும் அனுஷ்டித்து வருகிறார்கள்.

எல்லா நன்மைகளுக்கும் அடித்தளமாய் அமைந்த யாகத்திலே தீக்ஷா கோலத்திலே. சக்ரவர்த்தித் திருமகனைக் கண்ணாரக் காண வேணும் என்கிற தன் விருப்பத்தை தீக்ஷிதம் வ்ரத ஸம்பந்தம் இத்யாதிகளாலே ஸீதை வெளியிட்டாள். சக்ரவர்த்தித் திருமகனும் பௌண்டரீக அச்வமேதாப்யாம் வாஜபேயேந சாஸக்ருத் இத்யாதி ச்லோகங்களினால் பிராட்டி ஆசைப்பட்டதைப் பூர்த்தி செய்து காட்டியதை வெளியிட்டான் வால்மீகி.

இப்படித் திவ்யதம்பதிகள் யாகத்தில் ஈடுபட்டதைக் காட்டிய வால்மீகி, திவ்யதம்பதிகள் அர்ச்சாவதார மூர்த்தியான எம்பெருமான் (ரங்கநாதன்) இடத்தில் ஈடுபட்டு இருந்ததையும் ஸஹ பத்ன்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத் என்கிற ச்லோகத்தினால் வெளியிட்டான். இவ்வாறாக ஸ்ரீவைஷ்ணவாலயங்களிலே நடைபெறும் ஆசாரானுஷ்டானாதிகள் எல்லாம் வேதத்தையும் வைதிக மார்க்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவைகளே. **ச்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்ததே! ஆக்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:** என்கிற பகவத் வசனப்படி எப்பெருமானார் திருவடி ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள், வர்ணாச்ரமாசாரத்திற்குச் சேர, வைதிக கர்மாக்களான யஜ்ஞாராதனத்தையும் அர்ச்ச ாவதார ஸேவையையும் செய்து வந்தார்கள்.

காலக்ரமத்தில் வேஷ – பாஷாபோஜன வாஸஸ்தலாதிகளில் ஒருவிதமான மாறுதல் ஏற்பட்டுவிட்டபடியால் தத்காலம் அக்னி கார்யங்களைச் செய்யும் சூழ்நிலையே இல்லாமற் போய்விட்டது. தத்காலம் உபநயன விவாஹாதிகளே ஸரியாக நடைபெறும் சூழ்நிலை இல்லை. கர்மானுஷ்டானங்களுக்கு முக்யமாக அமைந்த உபநயனம், அத்யயனம், விவாஹம் இவைகள் முறைப்படி நடைபெற முடியாத காலமாய் இருக்கிறது.

உபநயன விவாஹா: உத்ஸவைக ப்ரதாநா: என்கிற முறையில் நடைபெற்று வரும் காலமாய் உள்ளது. ஆகையால் ஸகல ச்ரேயஸ்ஸையும் கொடுக்கவல்ல யஜ்ஞங்களின் மூலம் அக்னி உபாஸனம் எளிதில் பண்ண முடியாமல் போய் விட்டபடியால் ஆலயங்களிலாவது நித்ய நைமித்திக உத்ஸவாதிகளைச் செய்து, அதில் எல்லோரும் பங்கு கொண்டு அர்ச்சாவதார ஸேவா மூலமாக லோக க்ஷேமங்களையும் யாக பலன்களையும் ஸம்பாதிக்கும் படிக்கும் ஏற்பட்டுவிட்டது.

ஆகையால் இன்றும் ஆலயங்களில் அர்ச்சகர்கள் உத்ஸவ காலங்களிலும் பூஜாகாலங்களிலும், ராஜராஷ்ட்ராபி வ்ருத்யர்த்தம் என்று ஸங்கல்பித்துக் கொள்கிறார்கள்.

ஆகமங்களும் சிற்சில உத்ஸவகாலங்களில் எம்பெருமானை ஸேவித்தால் சதாச்வமேத பலன் என்றும் எம்பெருமானின் ப்ரஹ்மோத்ஸவ அவப்ருத ஸ்நாநம் செய்தால் பல யாகங்களின் அவப்ருத ஸ்நாந பலன் என்றும் சொல்லியிருப்பதைக் கவனித்தால் கீழ்க்கூறிய கருத்துக்கள் புலனாகும். இப்படி மிகப் பெருமை வாய்ந்த வைதிகமான இரண்டு விதமான பகவதாராதனத்தை நம்மால் முடிந்தவரை அனுஷ்டித்து, மற்றவர்களையும் அனுஷ்டிப்பித்து சக்தியுள்ளவர்கள் மற்றவர்களுக்கு யதோசிதம் உபகரித்து வேத மார்க்கத்தை ஸ்தாபித்து ஸர்வேச்வரனின் அருளைப் பெறுவோமாக!





## விசேஷ தீபோத்ஸவம்













விசேஷ தீபோத்ஸவம்











## விசேஷ தீபோத்ஸவம்





விசேஷ தீபோத்ஸவம்



ஸ்ரீ:

கண்ணுக்கினியன











கலியன் உத்ஸவம்



ஸ்ரீ:



கலியன் திருநக்ஷத்ரம்











## கலியன் திருநக்ஷத்ரம்









கலியன் திருநக்ஷத்ரம்



ஸ்ரீ:

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார் (17)

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

எம்பெருமானின் சோர வ்ருத்தாந்தத்தை அனுபவித்த பெரியாழ்வார் அடுத்து அக்கண்ணன் இடைச்சியரிடத்தில் நடந்துகொண்டதை **ஆற்றிலிருந்து விளையாடுவோங்களை** என்ற (2-10) திருமொழியில் அனுபவிக்கிறார். சென்ற திருமொழியில் யசோதையிடம் முறையிட்ட பெண்கள் அந்தந்த வீட்டு எசமானிகள். இங்கே முறையிடுபவர்கள் கண்ணனோடு விளையாடப் பிறந்தவர்கள்!

இத்திருமொழியில் பாசுரங்களின் முடிவில் இன்று முற்றும் இன்று முற்றும் என்று முற்றும் என்கின்ற வினைமுற்று வருகிறது. ஆனால் எழுவாய் கிடைக்கவில்லை. தக்கபடி எழுவாயைச் சேர்த்து நாம் பொருள் கொள்ள வேண்டும். பாசுரத்திற்குத் தகுந்தாற்போல் எங்கள் உடல், உயிர், கண்ணனோடு உள்ள ஸ்னேஹம், உங்களிடத்தில் உள்ள கௌரவம், கோகுலத்தில் உள்ளவரெல்லாம் உங்களோடு சேர்ந்து வாழ்வதே, கோகுலமே முடிந்துவிடும் என்று பலவிதமாகப் பொருள் கொள்ளலாம்; ஆகையால் முற்றும் என்பதை பொருத்தமாகச் சிந்தித்து அனுபவிக்கலாம்.

ஆற்றங்கரையில் இவனோடு ஸம்பந்தமே வேண்டாம் என்றுத் தனியாக நாங்கள் எங்கள் விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு மணலால் சிற்றில் கட்டிச் சிறு பொம்மையையும் செய்து அதற்கு ஆடையுடுத்தி அலங்காரம் செய்து விளையாட நினைத்திருந்த பொழுது இக்கண்ணன் தானாக வந்து எங்கள் மேல் சேற்றை வாரியிறைத்து, அதை நாங்கள் துடைக்கும் முன்னே கீழே வைத்திருந்த வளை, பட்டு முதலியவற்றை எடுத்துக்கொண்டு, காற்றைக் காட்டிலும் விரைந்து வீட்டில் புகுந்து கொண்டான். பின்னர் நாங்கள் கேட்ட பொழுது ஏதேதோ பேசுகிறானே தவர எடுத்த வஸ்துக்களைப் பற்றிப் பேசுகிறான் இல்லை. மறுமொழியே பேசாத பொழுது எடுத்ததைக் கொடுப்பதேது? இவனோடு இந்தப் பாடு படுவதினாலேயே எங்கள் உயிர் உடல் எல்லாம் முடிந்துவிடும் நிலைக்கு வந்துவிட்டது என்று சிறு பெண்கள் யசோதையிடம் முறையிடுவதாக முதல் பாசுரத்தை அமைக்கிறார்.

இரண்டாவது பாசுரத்தில் சற்று வயது வந்த பெண்பிள்ளைகள் முறையிடுவதைச் சொல்கிறார். கண்ணனே கணவனாக வேண்டுமென்று மார்கழி நோன்பு இருக்கையில், விடிவதற்கு முன்னெழுந்து யமுனையில் நீராடச்செல்கையில், அவர்களது பூசையை நேரில் பெறத் திருவுள்ளம் கொண்ட கண்ணன் அவர்களிடமுள்ள ப்ரேமத்தினால் அவர்கள் களைந்து கரையில் வைத்திருந்த துகில்களையெல்லாம் வாரி எடுத்துக்கொண்டு அருகிருந்த ஒரு கடம்ப மர உச்சியில் துணிகளைத் தொங்கவிட்டுத் தான் மறைந்து நின்று அவர்கள் அடுத்து செய்யப்போவதைக் கவனிக்கலானான். இவ்வாறு அவன் குனிந்து துகில்களை எடுக்கும் பொழுது அவனது குண்டலங்கள் தாழ்ந்த அழகையும், குழல்கள் தாழ்ந்த அழகையும், அவன் கழுத்தில் தொங்கும் நாண் தாழ்ந்த அழகையும் கண்டு அவ்வழகினில் ஈடுபட்டனர் அனைவரும். எட்டுத்திக்கிலும் இருந்த எல்லோரும் அழகில் மயங்கி இவனே ஈஶ்வரன் எனத் தெளிந்து நமஸ்கரித்துத் துதித்தினர் என்றால் இப்பெண்கள் பட்டபாட்டைத் தனியாகச் சொல்லவேண்டுமோ? தாங்கள் தனியாக இல்லை; கூடமற்றைப் பெண்கள் இருக்கின்றனர். அதுமட்டுமில்லை இப்போது எட்டுத் திக்கிலும் உள்ளவர்களும் கவனிக்கிறார்கள். ஆதலால் நீரிலிருந்து எழுந்தால் முகிழ்முலைகள் கண்ணன் உட்பட அனைவரும் கண்களுக்கும் ஆட்படும் என்று கூச்சமுற்று நீரிலிருந்து வெளியே வராமல், துகில்களைக் கொடுக்கும்படி என்னென்னவோ சொல்லிக் கண்ணனை இறைஞ்சினர். நீங்கள் துணியின்றி ஸ்நானம் செய்யலாமா? இது நதியில் நீராடும் பொழுது பெரும் பாவமாகாதோ? நீரிலிருந்து கரையேறி ப்ரணாமம் செய்யவேண்டும் என்று சொல்ல, அவர்கள் ஒரு கையால் தம் தனங்களை மறைத்துக் கொண்டு மற்றொரு கையை மற்றொரு பெண்ணின் கையுடன் சேர்த்து நமஸ்காரம் செய்ய, கண்ணன் இரு கைகளையும் சேர்த்து நமஸ்காரம் செய்வதன்றோ சாஸ்த்ரம்; இது சாஸ்த்ர விருத்தம் என்று சொல்ல பெண்கள் அவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நமஸ்கரித்துத் துகில்களைப் பெற்றனர். ஸர்வேச்வரனான கண்ணனிடம், பெண்கள் ஏகாந்தமாக நீராடும் பொழுது புருஷனான நீ இப்படிச் செய்யலாமா? இது சாஸ்த்ர ஸம்மதமா? என்று எப்படிக் கேட்பது என்று அங்கு கேட்காமல் இங்கு யசோதையிடம் முறையிட்டனர். விண்தோய் மரத்தினில் அமர்ந்திருந்தால் இன்று முடிந்து போனோம்! எத்தனை வேண்டிக்கொண்டபின்னும் கொடுக்காமல் இருந்ததனால் நாங்கள் முடிந்து போனோம் என்று சொல்வதாக பாசுரத்தை அமைத்தார்.

காளியன் தலையில் நடனம் புரிந்த விருத்தாந்தத்தைப் பாடுகிறார்கள் அடுத்ததாக மூன்றாம் பாசுரத்தில். நல்ல விசாலமான பொய்கை. காளியன் வராத காலத்தில் தாமரைகள் பூத்துக் குலுங்கி இருந்த இடம்.

இக்கண்ணன் உள்ளிருக்கும் காளியனை வெளியில் வரும்படிப் குதித்துப் பொய்கையைக் கலக்கி வெளியே விஷத்தைக் கக்கிக் கொண்டு வந்த அக்கொடிய பாம்பை வாலைப் பிடித்து இழுத்து படங்களையும் பெரிய பைகளையும் உடைய அதன் தலைகளிலே பாய்ந்தான். கரையில் இருப்பவர்கள் எல்லாம் பயந்து அழுதபொழுது அவ்விஷம் அவனை ஒன்றும் செய்யவில்லை என்றும் அவன் பிழைத்திருக்கிறான் என்றும் அனைவருக்கும் தெரியும்படி உடம்பை அசைத்து அருளினான். பின் அந்தக் காளியனின் படங்களின் மேலேறி ஆடியிருந்தான். அவன் உடம்பை ஆட்டி தான் உயிரோடு இருப்பதைச் சொல்லியிருக்காவிடில் நாங்கள் முடிந்தே போயிருப்போம் என்று முறையிடுவதாக ஆழ்வார் அனுபவிக்கிறார்.

அடுத்து நான்காம் பாசுரத்தில், கண்ணன் இல்லாவிட்டால் ஆயர்பாடியே முடிந்திருக்கும் என்று சொல்லும் பாசுரத்தை சொல்லி அப்படிப்பட்டவன் செய்த தீம்பினாலே நாங்கள் இன்று முடிந்துபோனோம். ஆனாலும் அவன் தீம்புகளை முறையிடாமல் இருக்கமாட்டோம் என்று அந்தப் பெண்கள் சொல்வதாகக் கூறுகிறார். கண்ணன் செய்யும் எந்தச் செயலும் விரோதிகளை அடக்குவதோடு மட்டுமன்றி ஆச்ரிதர்களையும் ஆநந்திக்கச் செய்யும். இந்த இரண்டில் இரண்டாவது பலனுக்காகவே முதல் பலனும் என்று நம் ஆசார்யகளெல்லாரும் விளக்குகிறார்கள். தேனுகாஸுரனுடைய உயிரை முடித்துப் பனம் பழங்களை எறிந்த விசாலமான பெரிய தோள்களின் பலத்தினால், தேவேந்திரன் நியமித்துப் பெய்த மழையை, கோவர்தனமலையை ஒரு விரலால் ஏந்தி விலக்கி, பசுக்கூட்டங்களையெல்லாம் காத்தருளினவனாலே இன்று முற்றும்; அப்பசுக்கள் உஜ்ஜீவனம் செய்வதற்கு அதிகாரம் கொண்டருளினவனாலே இன்று முற்றும் என்று பாடினார்கள். மலையின் பாரம் தாங்கிய தோள்களே ராஜ்ய பாரத்தையும் தாங்கியது என்று கோவிந்த பட்டாபிஷேகத்தையும் சேர்த்து அவை உய்யக்கொண்டானால் இன்று முற்றும் என்று ஆழ்வார் ஸாதித்தது அழகு!

அடுத்து இப்படிப்பட்ட பராக்ரமமுடைய தோள்களுக்குச் சொந்தக்காரனானக் கண்ணனையும் அடக்கிவைக்கும் தோள்களை உடைய இடைச்சி கள் அங்கு இருந்தார்கள் என்று காட்டுகிறார் ஐந்தாம் பாசுரத்தில். இப்பாசுரத்தில் ஆய்ப்பாடியை ஆழ்வார் ஆய்ச்சியர் சேரி என்கிறார். தொல்காப்பியப் பொருளதிகார உரையில் சேரியை முல்லை நிலத்தூர் என்று காட்டுகிறார்காள். முல்லை நிலத்தவரெல்லாம் இடையர், இடைச்சியர். இவர்களுக்குத் தெய்வம் திருமால். நுட்பமாக பதமிட்டுக் காட்டுகிறார் ஆழ்வார். கண்ணன் ஆய்ப்பாடியில் ஆய்ச்சியர் இல்லத்தில் புகுந்து அளைதயிரையும் பாலையும் உண்டு வெண்ணெய்க்காக வேறிடம் செல்லாமல் அவர்கள் இல்லத்திற்கே மீண்டும் செல்ல, வெண்ணெய்க் களவின் பொழுது அவர்கள் பிடிக்க, அகப்பட்டுக்கொண்டு இருந்தவனால் இன்று முடிந்துபோனோம். அன்று அவன் அழுதான், இன்று எங்களை அழவைக்கிறான் ஆதலால் நாங்கள் இன்று முடிந்தோம் என்று கண்ணனோடு விளையாடப் பிறந்த இளம் பெண்கள் முறையிடுவதாகப் பாசுரமிடுகிறார்.

அடுத்து ஆறாம் பாசுரத்தில் பூதனை வருத்தாந்தத்தைச் சொல்லிப் பேயையே பிணம்படச் செய்தவன் எங்களுக்கு மறுமொழி கொடுப்பானா? இவனால் நாங்கள் இன்று முடிந்தோம் என்று முறையிடுகிறார்கள். அவன் இந்த வ்ருத்தாந்தம் செய்து எங்களை வம்பிற்கிழுக்கும் பழக்கம் இன்றோ என்றால் இல்லை தள்ளித் தளர்நடை இட்டு இளம் பிள்ளையாய் இருந்த பொழுது! அப்பொழுதே அவனுக்கு அடுத்தவரின் உள்ளத்தை அறியும் ஸாமர்த்யம் இருந்தது! பூதனையின் உள்ளத்தை உற்று நோக்கி அவள் கள்ளத் தினால் வந்த பேய் என்று அறிந்துகொண்டு, அதற்காக முலையுண்ண மறுத்து அழாமல் மனத்துக்குள்ளேயே தான் செய்யவேண்டியதை வைத்திருந்து, அவளது முலையை உறிஞ்சும் பொழுது அவளது உயிரும் துடிக்க அதையும் உறிஞ்சிக் குடித்தானே! விடத்தையும் பால் போலவே ருசித்துக் குடித்தான். அதுவும் இனி அவளுக்கும் பாலுக்கும் ஸம்பந்தமன்றிப் போகும்படி துவக்கற உண்டானே! இவனிடம் எப்படி எதிர்த்துப் பேசுவது? என்று முறையிடுகிறார்கள். ஆழ்வார் இங்கு துவக்கற என்று பதமிடுகிறார். உண்மையில் இவன் அப்ராக்ருதன். ஆகையால் இவன் திருமேனிக்கு அழிதல் வளர்தல் கிடையாது; ஆதலால் துவக்கில்லை. மேலும் துவக்கற என்றது பூதனையின் உடலுக்கும் ஆத்மாவுக்குமான சம்பந்தம் போனது என்பதைக் குறித்தது. எம்பெருமான் உறிஞ்சியதாலே அவளுக்கும் கம்ஸனுக்குமான ஸம்பந்தம் போனது; கோகுலத்தில் மற்ற குழந்தைகளுக்கும் இவளால் தீங்கு வரக்கூடம் என்ற ஸம்பந்தமும் அகன்றது; என்று இவ்வாறு பலவழிகளில் பொருள் தரும் பதமிது!

ஏழாம் பாசுரத்தில் திருவிக்ரமாவதாரத்தில் எம்பெருமான் எல்லா உலகங்களையும் அளந்த விருத்தாந்தத்தைப் பாடி இவன் யாரென்று அறிவோம் ஆதலால் இவனை எதிர்த்து எங்களால் பேசமுடியாததால் அன்னையாகிய உங்களிடம் முறையிடுகிறோம்! இவன் செய்யும் தீம்புகளினால் நாங்கள் முடிந்தோம் என்ற பொருளில் பாடுகிறார்கள். எவ்வளவு ஸாமர்த்யமாகப் பேசுகிறார்கள் இந்தப் பெண்கள் பாருங்கள்! மாவலியின் வேள்வியிலே பிரம்மச்சாரியின்

வேடத்தில் சென்று என் அடி மூன்றுள்ள இடத்தைத் தாவென்று யாசித்து இந்த பூலோகத்தை ஒரே அடியை வைத்து அலங்கரித்து, இரண்டாவது அடி வைப்பதற்கே வேறிடம் அடிவைத்தவனான கண்ணனாலே இன்று முற்றும்! இரண்டாவது அடிக்கே ப்ரம்மாண்ட பூமி அனைத்தையும் அளந்தவனாலே இன்று முற்றும் என்று பாடுகிறார்கள்! இரண்டாவது அடியைத் தாவடி என்றார்கள். தாவடி என்பதைத் தாவி அடி வைத்தான் என்று கொள்ளவேண்டுமென்றால் தாவடி என்பது தொகுத்தல் விகாரமாகிறது. தாவு அடி என்று வினைத்தொகையாகக் கொண்டால் அன்று தாவிய அடி, இன்றும் தாவுகின்ற அடி, நாளை தாவும் அடி என்று சிறந்த பொருளைத் தந்து நிற்கும். தாவடி என்ற சொல்லுக்கே ப்ரயாணம் என்று பொருளுண்டு. ஆதலால் அடியைத் தூக்கி வேறிடம் வைப்பது என்றாகிறது. தாவு என்பதற்கு ஒதுக்கிய இடம் என்ற பொருள் உண்டு. அப்படிக்கொண்டால் முன் உபயோகிக்கப்பட்ட இடம் தவிர மற்ற இடங்கள் அதை அளந்தான் என்ற பொருளைத் தரும். அந்த இடம் எது என்பதைத் தரணி அளந்தான் என்று பின்னாலேயே சொல்லியதால் அளந்த இடம் தவிர எல்லா உலகங்களையும் சொன்னார்கள்.



எட்டாம்பாசுரத்தில் அந்தப் பெண்கள் கஜேந்த்ரமோக்ஷ வ்ருத்தாந்தத்தைச் சொல்லி அந்த முதல்வனானவன் செயலால் நாங்கள் முடிந்தோம் என்று சொல்வதாக ஆழ்வார் அனுபவிக்கிறார். கரைகளில் தாழைச் செடிகளோடும் நீரில் குளிர்ந்த ஆம்பல் கொடிகளோடும் இருக்கும் விசாலமாக நீண்டிருக்கும் தடாகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் முதலையிடம் அகப்பட்டுக் கொண்டு துன்பப்பட்டான், ஸ்ரீகஜேந்த்ராழ்வான். அவனின் வருத்தம் தீரும்படி ஸர்வ தேவ தேவனாய் வந்து திருவாழியாழ்வானுடைய கைங்கர்யத்தைக் கொண்டவனால் இன்று முற்றும்; அவ்வேழத்திற்கு சாபம் தீர்த்து மோக்ஷமளித்தவனால் இன்று முற்றும் என்று முறையிடுகிறார்கள். எப்போதும் விண்ணோர் பெருமானான இவன் இப்போதுதான் விண்ணோர் பெருமானாய் ஆனான் என்று சொல்வது எவ்வாறெனில், வேழம் முதலே! முதலே! என்று அழைத்த பொழுது நான் முதல்வன் இல்லை நான் முதல்வன் இல்லை என்று எல்லாத் தேவர்களும் வேழத்தின் துயரைத் துடைக்க இயலாமல் விலக, முதல் தனி வித்தான இவன், தானே நேரில் எழுந்தருளி திருவாழியைப் பிரயோகித்துத் தன்னை முதலாக நிரூபித்தான். இவன் திருவாழியை மட்டும் அனுப்பியிருந்தால் திருவாழியே முதலென உலகம் மயங்கும். ஆதலால் இவர்கள் முன்னே கருடன் மேல் ஏறி வந்து திருவாழியினால் பணி ஏற்றுக் கொண்டு முதலையின் சாப விமோசனமும், வேழம் பறித்த பூவைக் கொண்டு வேழத்தின் துயர்கெடச் செய்ததையும் ஒருசேர அருளினார் ஆழ்வார்.

ஒன்பதாவது பாசுரத்தில் வராஹாவதாரத்தை எடுத்தியம்பி இன்று முற்றும் என்கிறார்கள். யார் வராஹ ரூபத்தைக் கொண்டான் என்றால் ஆகாயத்திலே கிளம்பின மழை மேகம் போன்றவனும் காட்டிலே நிர்பயமாய் எல்லா இடத்திலேயும் ஆனந்தமாய் சஞ்சரித்துக்கொண்டு இருந்தவனுமாகி விளையாடியே அந்த உருவைக் கொண்டானாம். பெரும் வராஹரூபத்தை எடுத்துக்கொண்டு கீழ் அண்டச்சுவரில் ஹிரண்யாக்ஷகன் பூமியை அழுத்தி வைத்துக்கொண்டிருந்த பொழுது தன் கோட்டால் குத்தி யெடுக்கப்பட்ட பூமியை அது இருக்க வேண்டும் இடத்திலேயே வைத்தவனான கண்ணனாலே இன்று முற்றம் என்று சொல்லி மேலும் பூமியை தானத்தில் வைப்பது முக்கிய நோக்கமன்று; கவலைப்பட்டுக் கொண்டிருந்த பூமிப்பிராட்டியைத் தன் இடது பக்கத்தில் இருத்திக்கொள்ளவே கோட்டால் கிளப்பி எடுத்து வந்தான் என்பது தோன்றும்படியாக அந்தச் சிறுமிகள் தரணி இடந்தானால் இன்று முற்றும் என்று பாடினார்கள் என்கிறார் ஆழ்வார்.

இப்படி முற்றும் முற்றும் என்று பாடிய ஆழ்வார் பத்தாம் பாசுரத்தில் இதைப் பாடவல்லார்க்கு ஏதம் இல்லை என்று பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார். இங்கு பாடிய பெண்களை ஆழ்வார் நல்லார் என்று குறிப்பிடுகிறார்; இவர்கள் அவதார விஷயங்களையும் லீலைகளையும் சேர்த்து அனுபவித்தார்கள் என்பதாலே! இவர்கள் எம்பெருமானை நீ கூப்பிட்டுக் கொள்ள வேண்டும் என்று கூறியது அவனை விட்டுப் பிரிந்து தவிக்கிறோம்; அவன் செய்கைகளை நினைத்துப் பொழுது போக்குகிறோம்; நாங்கள் இப்படியே இருந்து முடிந்துவிடாதபடி எங்களுக்கு அவனை அனுப்பித்துத் தரவேண்டும் என்பதை மறைமுகமாகத் தெரிவிக்கிறார்கள் என்பதாம். ஆகவே இப்படி எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை அனுபவித்து அவன் செயல்களில் குற்றம் குறை ஏறிடுவது தகாது எனத் தெளிந்து அவனை அனுபவிப்பார்க்குக் குற்றம், கேடு, துன்பம் ஒன்றும் வாராது என்று பெரியாழ்வார் பலன் சொல்கிறார்.

*(தொடரும்...)*

ஸ்ரீ:

# திருப்பாவை ரஹஸ்யங்கள் ①

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

ச்ரிய:பதியாம் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே பரப்ரஹ்ம ஸ்வரூபம். மோக்ஷப்ரதனான அவனுக்கு ஸர்வ காலங்களிலும் ஸர்வ விதமான கைங்கர்யங்களையும் ஸர்வோசிதமாகப் பண்ணுவதே முமுக்ஷுக்களின் ப்ரதான கடமை. சாஸ்த்ரங்கள் அனைத்தும் நிஷ்கர்ஷிக்கும் இதையே கீதாசார்யன் அர்ஜுனனுக்கு உபதேசித்தான்.

*ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ|*
*அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:||*

எம்பெருமான் திருவாக்கின் படி **(மாசுச:)** கவலையின்றி இருக்க ஒவ்வொரு ப்ரபந்நனும் உத்தரக்ருத்யத்தில் (பரந்யாஸத்திற்குப் பின்னர்) செய்ய வேண்டிய விஷயங்கள் ஐந்து. ஸ்ரீராமானுஜரின் உத்தரவாகும் அந்த ஐந்து க்ருத்யங்கள் எவையெவை என்று ஸ்வாமி தேசிகன் ரஹஸ்த்ரயத்தில் காண்பிக்கிறார். சொல்லப்பட்ட ஐந்து க்ருத்யங்களில் இரண்டாவது க்ருத்யம் தமிழ் வேதமாகும் **'அருளிச்செயலைக் கேட்டுப் ப்ரவர்த்தித்தல்'.** இத்தகைய அருளிச்செயல்கள் நான்காயிரம் இருக்க, ஒரு மாதம் முழுவதும் ஒரு சேர ஸேவிக்கப்படுவதென்ற ஏற்றத்தினைப் பெற்றது நாச்சியார் அநுக்ரஹித்த திருப்பாவை முப்பது.

கோதை அருளிய திருப்பாவையின் ஸாரமாக அமைந்தது ஆசார்யன் தேசிகனின் ரஹஸ்யத்ரய ஸாரம். திருப்பாவையும் ரஹஸ்யத்ரயமும், கர்மாக்களினால் கட்டுண்ட ஆச்ரிதர்கள் உஜ்ஜீவிக்க ஏற்ற ஆஸ்ரயண காலத்தினையும், அவர்கள் ஆஸ்ரயிக்கத் தகுந்த சேஷன் யார் என்பதையும், எப்படி ஆஸ்ரயிக்க வேண்டுமெனும் ஆஸ்ரயண ப்ரகரத்தினையும், ஆச்ரயிப்போரின் விசேஷத்தையும், ஆச்ரயிப்பதனால் அநுக்ரஹமாகும் விஷயத்தையும் ஸ்பஷ்டமாகக் காண்பிக்கின்றன. வேதாந்த ரஹஸ்யங்களை ஸூக்ஷ்மமாகத் தன்னுள் அடக்கிய திருப்பாவை பாசுரம் ஒவ்வொன்றையும் ஸங்க்ரஹமாக அந்வயித்து அவை தம்முள் ஏந்திய ரஹஸ்யங்களை அறிய முற்படுவோம்.

**1. மார்கழி ரஹஸ்யம்**

பின் வரப்போகும் அத்யாயங்களில் நிர்வாஹம் செய்யப்படும் வேதாந்த விஷயங்களுக்கு முன்னுரையாகிறது ஆசார்யன் தேசிகன் அருளிய ரஹஸ்யத்ரய ஸாரத்தின் முதல் அதிகாரம் -- உபோத்காத அதிகாரம்.

*ஆபகவத்த: ப்ரதிதாமநகாமாசார்யஸந்ததிம் வந்தே|*
*மநஸி மம யத்ப்ரஸாதாத் வஸதி ரஹஸ்யத்ரயஸ்ய ஸாரோண்யம்||*

தொடக்கத்திலேயே ஆசார்ய ஸந்ததிகளை வந்தனம் செய்து எம்பெருமானைப் பணிகிறேன் என்பது இதன் அர்த்தம். திருப்பாவையின் முதல் பாசுரமும் ஆசார்ய ப்ரபாவத்தினைக் கொண்டாடித் தொடங்குகின்றது.

**மார்கழித் திங்கள்** மாதத்தினைக் காண்பித்து (கால விசேஷம்) **கூர்வேல் கொடுந்தொழிலன்** கர்மாக்களினால் தேஹாத்ம விஷயங்களில் உண்டாகும் ஸம்சயங்களை அழித்து **யசோதை** பெற்ற தாயினும் மேலான காருண்யத்துடன் நம்மை காக்கும் ஆசார்யனின் ப்ரபாவம் கூறி **சீர்மிகு செல்வம்** கைங்கர்ய ஸாம்ராஜ்யமே சாச்வதமான செல்வம் என்பதை கர்மபத்தர்கள் உணரும் நாளே **மதி நிறைந்த நன்னாள்.**

**2. வையத்து ரஹஸ்யம்**

*ச்ருதிபதவிபரீதம் க்ஷ்வேளகல்பம் ச்ருதௌ ச*
*ப்ரக்ருதிபுருஷபோகப்ராபகாம்சோ ந பத்ய:|*
*ததிஹ விபுதகுப்தம் ம்ருத்யுபீதா விசிங்வந்தி*
*உபநிஷதம்ருதாப்தேருத்தமம் ஸாரமார்யா:||*

இரண்டாவது அதிகாரமான ஸாரநிஷ்கர்ஷாதிகாரம், அஸாரம் (பலன் அற்றவை), அல்ப ஸாரம் (அற்பமான பலன்களைத் தருபவை), ஸாரம் (பலனைக் கொடுக்க வல்லவை), ஸார தரம் (மிகவும் ஸாரமான பலனைத் தருபவை) ஆகியவற்றைப் பற்றி விளக்கி, முமுக்ஷுவானவன் கொள்ளத்தக்கவை, தள்ளத்தக்கவை எவையெவை என்பதை நிஷ்கர்ஷித்து, க்ஷீர ஸாகரத்தின் அம்ருதம் போன்றவனும் சதுர்வேதங்கள் போற்றும் மூர்த்தியாகும் ஸ்ரீமந்நாராயணனே ஜீவர்கள் அடையத்தக்க உத்தமமான ஸாரம் (ஸார தமம்) என்று உபதேசிக்கிறது. ஐச்வர்ய, கைவல்யாதி, ஐஹிக, ஆமுஷ்மிக ஆத்மானுபவங்கள் முமுக்ஷுக்கள் கொள்ளத் தகாதவை என்பது பூர்வர்களின் நிர்வாஹம்.

முமுக்ஷுக்கள் உத்தர க்ருத்யத்தில் செய்ய வேண்டியவை எவை, செய்யக் கூடாதவை எவை என்பதைத் திருப்பாவையின் இரண்டாம் பாசுரம் கற்பிக்கிறது.

**மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்** ஏனெனில் இவை கேவலம் தேஹத்திற்கு செய்யும் அநித்யமான அலங்காரங்கள். தேஹத்தினின்று வேறுபடும் சுத்த ஸத்வமான ஆத்மாவிற்கு இவற்றால் ப்ரயோஜனமில்லை. **நாட்காலே நீராடி** நித்ய கர்மாக்களான ஸ்நாநாதிகளின் யோக்யதை **நெய்யுண்ணோம் பாலுண்ணோம்** யாக ஹோமாதிகள் மூலம் கிடைக்கப் பெறும் ஸ்வர்கம் முதலான ஐஸ்வர்யாதிகள் கூட அநித்யமானவையே. அதனால் அவற்றை அடைவதென்பது முமுக்ஷுக்களின்

உத்தேச்யமாக இருக்கக் கூடாது. **செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்** கைவல்யமெனப்படும் ஆத்மானுபவமும் கூட பஹிஷ்கரிக்க வேண்டிய ஒன்றே. **பையத்துயின்ற பரமன் அடிபாடி** ஸ்ரீமந்நாராயணன் திருவடியில் மட்டும் சரணடைவதே ப்ரபந்நர் களுக்கான ஸ்வரூபம்.

### 3. உலகளந்த ரஹஸ்யம்

*ஆதேயத்வப்ரப்ருதிநியமைராதிகர்துச்சரீரம்*
*ஸத்தாஸ்தேமப்ரயதநபலேஷ்வேததாயத்தமேதத்|*
*விச்வம் பச்யந்நிதி பகவதி வ்யாபகாதர்சத்ருஷ்டே*
*கம்பீராணாமக்ருதககிராம் காஹதே சித்தவ்ருத்திம்||*

ரஹஸ்யத்ரய ஸாரத்தின் மூன்றாவது அதிகாரமாகும் **ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம்,** சேதன அசேதன வஸ்துக்கள் அனைத்தும் எம்பெருமானது ப்ரயோஜனத்திற்காகவே இருப்பதையும், அவனை விட்டுப் பிரியாத தன்மையுடையவை என்பதையும் உணர்த்தி, அவனது அதேயத்வம், நியாம்யத்வம், சேஷத்வம் ஆகிய திருக்கல்யாண குணாதிகளை நிரூபணம் பண்ணும். சேஷன், சேஷி ஆகியவை எவற்றைக் குறித்தது என்று உணர்த்தி இந்த ஜ்ஞானத்தினால் உண்டாகும் ப்ரயோஜனம் எதுவென்று காட்டும். சேதனர்கள் அநந்ய சரண்யர்கள் என்பதனால் அநந்ய ப்ரயோஜனர்கள் என்பதை நிஷ்கர்ஷிக்கும். எம்பெருமானின் ஸ்வாமித்வத்தினை நிரூபணம் செய்து அனைத்தும் அவனது சரீரமே என்றுணர்த்தும்.

திருப்பாவையின் மூன்றாம் பாசுரமும் எம்பெருமானின் சரீராத்மபாவத்தினை உணர்த்துகிறது.

**ஓங்கி உலகளந்த** அனைத்திலும் வ்யாபித்த ஸ்வாமித்வம். அனைத்தும் அவனது அதீனம். இந்த ஜகமே அவனது சரீரம். 'சேஷி'யான அவனே உடமையாளன். கர்மபத்தர்கள் அனைத்திற்கும் யஜமானனான அவனுக்கு அடிமைப்பட்ட சேஷர்கள்.

**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து** எல்லா காலத்திலும் எல்லா ப்ரகரணத்திலும் சூழும் அவனது ரக்ஷகத்வத்தினைப் பறைசாற்றியது.

**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப** எம்பெருமானின் ஆதேயத்வம் (அனைத்தையும் தரிக்கும் சக்தி) எப்படிப்பட்டது என்று உணர்த்தியது. **சீர்த்த முலை பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்** ஆயர்கள் நியமிக்கக் குடங்களைப் பாலினால் நிறைக்கும் பசுக்கள் என்பது நேரடியான அர்த்தமாக இருந்தாலும், இந்த நியாம்ய பாவ த்ருஷ்டாந்தத்தின் மூலம், ஆச்ரிதர்களின் சேஷத்வமும் பாத்யதைப்பட்டவனின் நியாம்யத்வமும் (நியமிப்பதற்கான அதிகாரம்) ஸ்தாபிக்கப்பட்டது. **ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள** பாகவத ஸம்பந்த சேஷத்வ பாவத்தின் ஏற்றம். **சாற்றி நீராடினால்**



சரணாகதி எனும் உபாயத்தினை அநுஷ்டித்தால் **நீங்காத செல்வம்** மோக்ஷத்தினை அடையலாம்

### 4. ஆழி மழை ரஹஸ்யம்

நான்காவது அதிகாரமாகும் அர்த்தபஞ்சகாதிகாரம், ஓம் நமோ நாராயணாய அஷ்டாக்ஷரத்தின் ஏற்றத்திற்குக் கட்டியம் கூறியது.

*ஆதௌ ப்ராப்யம் பரமமநகம் ப்ராப்த்ரு ரூபம்ச மாதௌ*
*இஷ்டோபாயம் த்வயநமஸோரீப்ஸிதார்தம் சதுர்த்யாம்|*
*தத்வ்யாகாதம் மமக்ருதிகிரி வ்யஞ்ஜயந்தம் மநும் தம்*
*தத்ப்ராயம் ச த்வயமபி விதந் ஸம்மதஸ்ஸர்வவேதீ||*

1. ப்ரணவமும் அஷ்டாக்ஷரமும் நாராயண சப்தமும் அகாரத்தின் மூலம் அடையப்பட வேண்டியவனின் ஸ்வரூபத்தினைக் காண்பிக்கிறது.
2. நம: சப்தத்தின் அகாரம் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தினை உணர்த்துகிறது
3. நாராயணாய என்பதின் அயந சப்தம் எம்பெருமானை அடைவதற்கான ஸித்தோபாயம் கூற
4. நம: சப்தத்தின் மூலம் சரணாகதி ஸாத்யோபாயமாவதை உணர்த்திற்று
5. நம: சப்தத்தில் உள்ள மகாரம் அஹங்கார மமகாரங்கள் பகவானை அடைவதற்கு தடையாக இருப்பதை அழுந்தச் சொல்லிற்று.

திருப்பாவையின் நான்காம் பாசுரம் அர்த்த பஞ்சகத்தை அழகுற விளக்கும்.

**ஆழி மழை** ஆதியான ப்ராப்யம் (ஸ்வாமி) அவன். அவனே ஸ்ருஷ்டிகர்த்தாவும், ரக்ஷகனும் **ஊழி முதல்வன்** ஸம்ஹரிப்பவனும் ஆவான். **உருவம் போல் மெய்** ஜீவாத்ம ஸ்வரூபம். எம்பெருமானுக்கு ஜீவாத்மா சரீரம். **ஒன்று நீ கைகரவேல்** ஸ்வாமியான அவனை (உபேயம்) அடைவதற்கான ஸித்தோபாயம் அவனது

ஸங்கல்பமே. **ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து** ஸத்வ ஜ்ஞானத்தினால் மட்டுமே அடையக் கூடியவன் அவன் என்ற ஸாத்யோபாயம்

**தாழாதே ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி** - எது ஸத்ய ஸ்வரூபம் என்பதை உணர்ந்து ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாச புராணங்களை கைவிளக்காகக் கொண்டு ஜ்ஞானத்தை சம்பாதித்து, ப்ராப்தி விரோதிகளாகும் அஹங்கார மமகாரங்களுக்கு ஆட்பட்டு தாழ்ந்து விடாது உபாயத்தை அநுஷ்டிக்க வேண்டியதின் அவச்யம்.

**5. மாயன் மைந்தன் ரஹஸ்யம்**

ரஹஸ்யத்ரய ஸாரத்தின் ஐந்தாவது அதிகாரமாகும் தத்வத்ரயசிந்தநாதிகாரம், போக்தா, போக்யம், நியந்தா ஆகிய மூன்று தத்வங்களைப் பற்றின ஜ்ஞானத்தின் அவச்யத்தை விளக்கும்.

பூர்வ ஜன்ம கர்மாக்களின் பலனாக ஸுக துக்கங்களை அநுபவிக்கும் சேதனம் போக்தா எனவும், சேதனனால் அநுபவிக்கப்படும் அசேதனம் போக்யம் எனவும், சேதன அசேதனங்களை நியமிக்கும் ப்ரேரிதாவாகிற பகவான் நியந்தா எனவும் காட்டும். ஆத்மா சேதனம். சேதனமாகிய ஆத்மா அநுபவிக்கும் சரீரமே போக்யம். இந்த போக்த்ரு, போக்ய, நியந்த்ரு பற்றின ஜ்ஞானமே தத்வ விவேகத்தினை அநுக்ரஹித்து எம்பெருமானின் நிக்ரஹ ஸங்கல்பத்தினை போக்க வழிகோலும்.

*ப்ரக்ருத்யாத்மப்ராந்திர்களதி சிதசில்லக்ஷணதியா*
*ததா ஜீவேசைக்யப்ரப்ருதிகலஹஸ்தத்விபஜநாத்|*
*அதோ போக்தா போக்யம் ததுபயநியந்தேதி நிகமை:*
*விபக்தம் நஸ்தத்வத்ரயமுபதிசந்த்யக்ஷததிய: ||*

ஐந்தாம் பாசுரத்தில் **மாயனை மன்னு வடமதுரை மைந்தனை** என்று ஸேவித்து பரமார்த்த ஸ்வரூபம் மாயன். ஜீவாத்மஸ்வரூபம் மைந்தன் (ஸர்வேச்வரனின் புத்ரன்) என்று ஸாதிக்கிறாள் பெரியாழ்வார் புத்ரி. மைந்தன் எனும் பதத்தில் ப்ரஹ்மன் முதலான நித்ய, முக்த ஜீவர்கள் அனைவரும் அடக்கம்.

**ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை** அவனே ஈஸ்வர தத்வம் என்பதை பூதனா கம்ச வதங்கள் மூலம் நிஷ்கர்ஷிக்கும். **'தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை'** ஜீவ ஈச்வர தத்வங்களின் ஐக்யத்தினைப் பேசி எம்பெருமானது ஸௌலப்யத்தினை வெளிப்படுத்தும். **தூயோமாய் வந்து நாம் தூமலர்த் தூவித்தொழுது** - ஆசார்யனால் தத்வ ஜ்ஞானம் அநுக்ரஹிக்கப் பட்ட ஆச்ரிதர்களாய் **வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க** ஆசார்யன் உபதேசத்தினையே வேதமாகக் கொண்டு எம்பெருமான் அடி பணிந்தக்கால் **போய பிழையும் தீயினில் தூசாகும்** ஜீவர்களின் கர்மாக்கள் அனைத்தும் தீர்ந்து பரமாத்மனுடனான ஸம்ச்லேஷம் உண்டாகும்.

திருப்பாவை ரஹஸ்யங்கள் எனும் வ்யாஸத்தின் முதல் பாகமாகும் இதில், கோதா நாச்சியார் அநுக்ரஹித்த திருப்பாவையின் முதல் ஐந்து பாசுர ரஹஸ்யங்களில் அந்வயித்தோம். திருப்பாவையின் மற்ற பாசுர ரஹஸ்யார்த்தங்களையும் அறிய (எம்பெருமானிடத்தே) புருஷகாரம் பண்ணவேணுமாய் வேண்டி கோதா பிராட்டியின் திருவடியில் சரணடைவோம்!

***(தொடரும்...)***


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு,
சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச்
சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள்
வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான
அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (9)

## Small Things To Follow But Plenty Of Value

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

For any ideology to thrive, code of conduct and adherence to the same by its followers is a pre-requisite. It is evident that predecessors of our Srivaishnava tradition were prompt in realising that, as they have chalked up numerous disciplinary principles for our benefit. These, while helping us to keep in close sync with our Sampradaya, act as tools of self-regulation. We have seen that the more earnest we are in following them, the more rewarding and auspicious it turns out to be.

A compilation of some of the important but simple guidelines is provided below. An unmistakable sense of satisfaction and (modest) pride, feel-good effect and personality enrichment will result in practising them. Here they are:

- When waking up, one should chant the name 'Hari' seven times daily.
- Should meditate on our Acharyas and elders with gratitude.
- While going to toilet, men should circle the sacred thread around the right ear.
- One should, without fail, gargle with water, wash legs and do Achamanam (men) after urinating, etc. and then wear the sacred thread properly.
- Wearing Thiruman and performing Sandhya Vandhanam in all the three sessions is a must for men.
- Women also should wear the Thiruman ideally, or draw a Thilakam at least.
- One should always be clad in traditional attire during the occasions of Vedic/Sampradayaic rituals — for men it is Pancha Kachcham and for women it is Madisaar. Doing the daily chores, Thiruvaaraadhanam, visiting temples and domestic functions are some examples.
- The Lord's Altar (Sannidhi) should be neatly maintained at all times and Kolam should be drawn freshly before the daily Thiruraaraadhanam.
- Lamp(s) should be lit therein both in the morning and evening.
- Women should prepare food with devotion to the Lord, and if possible, reciting or singing hymns, Divya Prabandham, etc.
- One should make it a point to prostrate before the Lord daily.
- The daily divine chores must be performed with utmost devotion and involvement.
- Any food/eatable should be consumed only after offering to the Lord.
- Men should eat only after duly performing Pariseshanam and taking in Perumal Theertham.
- Then, Praanaahuthi and chanting of the name 'Govinda' must be done before starting to eat.
- Upavaasam (fasting) on Ekadasi day is most ideal. When it is not practicable, one should avoid food made of full rice; Sojji or tiffin (made of broken rice) is an acceptable substitute.
- Paaranai (ending of fasting) on Dvaadasi is as important as the Ekadasi regulation. It must be done within the time prescribed. Generally, it is before the lapse of six Naazhigais (6x24 = 144 minutes) from sunrise, subject to the presence of Dvadasi Tithi.
- One should eat anything while sitting only, and not while standing or walking.
- When going out, the name 'Kesava' should be chanted.
- Parents and elders at home are to be revered. It is a good practice to prostrate before them and seek their blessings daily, ideally, after doing the evening Sandhya Vandhanam.
- Abhivaadhanam should be done for men only, apart from one's mother. It should not be done in respect of Ghoshti or Sannyasis.
- The name 'Madhava' should be chanted daily at the time of going to bed.

It will be a good idea to have a reality check as to how we are placed in observing the above. One should always look to raise the bar constantly when striving to enhance the values in life, be it personal or professional. Indeed, evolution is a means; cannot be an end.

*(to be continued…)*

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (9)

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter - 8**

**Adhikari Vibhaga Adhikaram**

Vibhagam means to divide. Adhikaris are divided into two – namely, one who has Adhikaram for (entitled to do) Bhakthi Yoga and the other who is entitled to do Prapatthi (surrender).

As said earlier Nivrutthi Dharmam is performed for Moksha Phalan. This could be in two forms: Adhvaraka Prapatthi (direct surrender) and Sadhvaraka Prapatthi (Bhakthi Yogam). Interestingly, there is Prapatthi in Bhakthi Yoga too, that is done for destroying those sins that prevent the completion of Bhakthi Yoga. Here, the goal is to remove impediments to the means, the means being Bhakthi Yoga, the end being Moksha.

Similarly, there is Bhakthi in Prapatthi too, as a Prapanna is supposed to spend his life in this world doing Sadhya Bhakthi (meditating upon Bhagavan here which is a form of Phalan by itself) while Bhakthi Yogam or Sadhana Bhakthi is done as a means (Upaya) for Moksham. Thus, both Upayas have both in them.

These two Upayas have to be taken up by Chethanas according to their entitlement (Adhikaram). Bhakthi Yoga can be done only by those who are born in the first three Varnas, have the necessary strength to complete all the processes, and who can withstand the delay in attaining Moksham. All others can do Prapatthi.

Just like there are different types of Snaanam (bath) mentioned in Sasthras applicable to different types of people, based on applicability, Prapatthi can be done via Ukthi Nishtai or Acharya Nishtai.

Those who do not have extensive knowledge of the function, its pre-requisites, etc., repeat the words of Acharyan with faith that He is the protector, and they have no means but to surrender unto Him which is called Ukthi Nishtai. Swami gives the analogy of a child prince repeating the words of nannies to the king without knowing the full import of the words.



Thus, Bharanyasam or entrusting the responsibility of our protection to Him through Ukthi Nishtai is similar to a small boy saying "Bhavathi Biksham Dehi" as was taught to him and even though he doesn't know its meaning, still those words fetch him food from a merciful family, and hence Ukthi would undoubtedly fetch the required benefit of Moksham.

Acharya Nishtan is one who is included in the Prapatthi of Acharyan. It is said in Sandilya Smruthi, that he submits himself to Acharyan as son, servant and sishya. One can perform either Ukthi Nishtai or Acharya Nishtai, and either one would fetch the desired result.

In fact, Swami Desikan says when Bhagavan protects those who surrendered unto Him, it goes without saying that He will protect those who surrendered unto Bhagavathas, as they are closer to His heart. Swami quotes Sri Mudaliandan's words -- When a lion jumps from one mountain to another, the insects on its body also crosses the mountain without any

effort on their part. Thus, Sri Bhashyakarar crossed the ocean of Samsara and we benefited by our connection to him.

A person can attain Moksham only if, in any form, or by anyone on his behalf, a Prapatthi has been done.

Now, a question arises as to how then some Sasthras show instances of living in a Punya Kshetra or living under the auspices of a Bhagavatha leading to Moksham. Swami avers that even in those cases, there would be an Upaya before or after, by themselves or by others on their behalf.

This Kshetra Vaasa etc. inspire one to set upon the righteous path of Moksham and do Upaya and for those who have already performed the Upaya, they serve to exemplify Upasana in Bhakthi Yoga and more Kainkaryams in the case of Prapanna.

Chethanas like Vyasa doing Bhakthi Yoga attain Moksham after their Praarabdha Karma is dissipated. However, a Prapanna attains moksha at the specific time he has asked for like the end of this life, or a specific date, etc.

This Prapatthi removes all impediments, can fetch any benefit, easy to do, needs to be done only once, not stopped by any hurdles, and does not need any other supporting function.

Since this Sariram can be used for experiencing Bhagavan in Archavathara and doing Kainkaryam, some Azhwars have even preferred Samsara and hence it is considered that a Prapanna has started to benefit already while remaining in this world till his life here ends. He ascends to Moksham directly without any further delay.

Both Bhakthi and Prapatthi can fetch all benefits (Phalan) like Aiswaryam (wealth), Kaivalyam (self-realisation) and Moksham. The experiences in Srivaikuntam are similar for both Bhakthi Yoga Nishta and Prapanna.

Both remain subservient to Bhagavan and do all Kainkaryams as per His will. In effect, there is no special treatment for Chetanas who have chosen the arduous route of Bhakthi Yoga as compared to those who have performed Saranagathi just once in a matter of minutes.

The difference lies in the fact that though Bhakthi Yoga Nishta can attain Moksham only after his Praarabdha Karma is destroyed (how many Janmaas it would take cannot be known), he can experience Bhagavan in His full glory during Yoga Dasa here itself while a Prapanna attains Moksham immediately after his Athma leaves his body in this Janma.

*(to be continued…)*


**ஆஸ்திகர்கள் கவனத்திற்கு**

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின்
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும்
விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

**Sponsorships and donations towards publication expenses are welcome**



# With Pranams:

**Kimsuka Narasimhan, S. Narasimhan and Pushpa Narasimhan,**
No. 26, Poes Garden,
Ceebros Arjay, Chennai 600 086.

&

**N. Seshadri & Family,**
8/16, Justice Sundaram Road,
Mylapore, Chennai 600 004.

**SVDD thanks Kimsuka Narasimhan, S. Narasimhan and Pushpa Narasimhan & N. Seshadri & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam





திருப்பாண் ஆழ்வார் திருநக்ஷத்ரம்





ச்ரவண உத்ஸவம்



